முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2016 யூலை

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறியும்

(Business Law and Ethics)

2016 – 07 - 16
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**
  (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடம்*
  *விடையெழுத : 03 மணித்தியாலம்*
  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.***
  (3) ***விடைகள்*** *யாவும் தரப்பட்ட* ***விடைப் புத்தகத்தில்*** *பரீட்சைக்கு விண்ணப்பித்த* ***ஒரு மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  (4) *நீங்கள் ஏதாவது எடுகோள்களை எடுத்திருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடுக.*
  (5) ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 10

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பத்து (10) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** முதல் **1.7** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவுசெய்க. தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை அவ்வினாவுக்குரிய இலக்கத்துடன் உங்களது விடைப்புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் எந்த நீதிமன்றம் இலங்கையில் முதன்மை நிலை குற்றவியல் நியாயாதிக்கத்தைக் கொண்டிருக்கிறது?

(1) நீதவான் நீதிமன்றம்
(2) மாவட்ட நீதிமன்றம்
(3) மேன்முறையீட்டு நீதிமன்றம்
(4) உச்ச நீதிமன்றம்

**1.2** பின்வருவனவற்றுள் இலங்கைச் சட்டத்தின் அதியுச்ச மூலமாகக் (source) கருதப்படுவது எது?

(1) உச்ச நீதிமன்றம்
(2) வர்த்தக உயர் நீதிமன்றம்
(3) அரசியலமைப்பு
(4) தீர்ப்பு வழிச் சட்டம்

**1.3** பின்வருவனவற்றுள் இலங்கையின் சட்ட முறைமை தொடர்பில் சரியான கூற்று எது?

(1) இலங்கைச் சட்ட முறைமையில் மீள் நிரப்புச் சட்டம் (residual-law) எதுவுமில்லை.

(2) மத்தியஸ்தம் (mediation) என்பது, நீதிமுறையான பிணக்குத் தீர்க்கும் முறையன்று.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றமானது, மேன்முறையீடு தொடர்பான நியாயாதிக்கத்தின் மிகவுயர்ந்த நீதிமன்றமாகும்.

(4) மேலுள்ளவை யாவும்.

**1.4** பின்வருவனவற்றுள் புறக்குறிப்பின் ஓர் வகையாக **அமையாதது** எது?

(1) வெற்றுப் புறக்குறிப்பு

(2) விசேட புறக்குறிப்பு

(3) நிபந்தனையற்ற புறக்குறிப்பு

(4) மட்டுப்படுத்தப்பட்ட புறக்குறிப்பு

**1.5** முற்தேதியிடப்படுகின்ற முகவராண்மை உறவானது, பின்வருவனவற்றுள் எதன் மூலமான முகவராண்மையின் உருவாக்கமாக அறியப்படுகிறது?

(1) முரண் தடையின் (estoppel)

(2) வலுவாக்கலின் (ratification)

(3) அவசியத்தன்மையின் (necessity)

(4) வெளிப்படைத்தன்மையின் (expression)

**1.6** பின்வருவனவற்றுள் எந்த வகையைச் சேர்ந்த ஊழியர்கள், 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) கீழ் உள்ளடக்கப்படுகின்றனர்?

(1) ஒப்பந்த ஊழியர்கள்

(2) நிரந்தரமான மற்றும் நிரந்தரமற்ற ஊழியர்கள்

(3) நாட்கூலி ஈட்டுபவர்கள்

(4) மேலுள்ள அனைவரும்.

**1.7** பின்வருவனவற்றுள் சர்வதேச வர்த்தகத்தில் **பயன்படுத்தப்படாத** கொடுப்பனவு முறை எது?

(1) நாணயக் கடிதம்

(2) காசுக் கட்டளை

(3) சேகரிப்பு உடன்படிக்கை

(4) முற்கொடுப்பனவு

*வினா இல. **1.8** முதல் **1.10** வரையானவற்றிற்கு சுருக்க விடைகளை உங்களது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.8** இலங்கையிலுள்ள இரண்டு (02) ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களைக் **கூறுக.**

**1.9** ஒப்பந்தம் செய்வதற்கான முழுமையான தகைமையைக் கொண்டிராததன் காரணத்தால் சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்படும் நபர்களில் இரண்டு (02) வகையினரைக் **கூறுக.**

**1.10** ஒப்பந்தம் ஒன்றை முடிவுறுத்துவதற்கான இரண்டு (02) முறைகளைக் **கூறுக.**

(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி A யின் முடிவு*

## <u>பகுதி B</u>

ஐந்து (05) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**வரையறுக்கப்பட்ட ABC கம்பனி,** அதன் தலைமையகத்தில் அமைந்துள்ள அவர்களுடைய பிரதான நிறைவேற்றுத்தர அலுவலரின் அறையினை, தமது வெளிவாரி ஆலோசகர்களில் ஒருவரான **அனில்** என்பவரின் உத்தியோகபூர்வப் பாவனைக்கு அனுமதித்திருந்தது. காகிதாதிகள் வழங்குநரான **கமல், அனில்**தான் கம்பனியின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருக்கிறார் என நேர்மையாக நம்பிக் கொண்டு **வரையறுக்கப்பட்ட ABC கம்பனிக்கு** காகிதாதிகளை வழங்கல் செய்வதற்கான ஒப்பந்தமொன்றினுள் நுழைந்திருந்தார். **கமல்,** செய்யப்பட்ட வழங்கல்களுக்கான கொடுப்பனவைக் கோரும்போது, **அனில்** ஒரு வெளிவாரி ஆலோசகர் என்பதாலும் அவர் **வரையறுக்கப்பட்ட ABC கம்பனியின்** ஒரு ஊழியரல்ல என்பதாலும் அக்கொடுப்பனவைத் செய்வதற்கு **வரையறுக்கப்பட்ட ABC கம்பனி** மறுத்திருந்தது.

**கமல், வரையறுக்கப்பட்ட ABC கம்பனியிடமிருந்து** கொடுப்பனவைக் கோருவதற்கு உரித்துடையவரா என்பதை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 03

“சர்வதேச வர்த்தகத்தில் பிரதானமாக இரண்டு வகையான ஒப்பந்தங்கள் இருக்கின்றன. அவையாவன, கப்பற் செலவு நீங்கலான ஒப்பந்தம் (FOB) மற்றும் கிரயம், காப்புறுதி மற்றும் சரக்கு ஒப்பந்தம் (CIF). இவ்விரு ஒப்பந்தங்களும் அவற்றிற்கே உரித்தான இயல்புகளைக் கொண்டுள்ளன. அவையே அவ்விரு ஒப்பந்தங்களையும் வேறுபடுகின்றன”.

FOB மற்றும் CIF ஆகிய ஒப்பந்தங்களுக்கிடையேயான வேறுபாடுகளை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 04

காசோலை ஒன்றினைக் குறுக்குக் கோடிடக்கூடியதாக இருக்கின்ற அதே வேளை மாற்றுண்டியல் ஒன்றினைக் குறுக்குக்கோடிட முடியாதிருப்பது, காசோலை ஒன்றிற்கும் மாற்றுண்டியல் ஒன்றிற்குமிடை யேயான பிரதான வேறுபாடுகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. காசோலையொன்றைக் குறுக்குக் கோடிடுதல் காசோலைக்கு அதிக பாதுகாப்பினை வழங்குகிறது.

குறுக்குக் கோடிடலின் இரண்டு (02) வகைகளை அவற்றின் சட்டரீதியான விளைவுகளுடன் **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

### வினா 05

இரண்டு பிள்ளைகளின் தந்தையான **அமல்,** 2012 ஆம் ஆண்டிலிருந்து கொழும்பில் இருக்கின்ற புகழ் பெற்ற சிறப்பு அங்காடி (சுப்பர் மார்கட்) ஒன்றில் உதவி முகாமையாளராக பணியாற்றுகின்றார். ஒரு நாள் அவர் பாடசாலை விட்டு தனது இரண்டு பிள்ளைகளுடனும் வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது விபத்தொன்றில் சிக்கி, கடுமையான காயங்களுக்கு உள்ளானார். இதன் விளைவாக அவருக்கு ஒரு வருட படுக்கை ஓய்வு (bed rest) தேவைப்பட்டது. இதன் காரணமாக, அவரால் தனது வேலைப் பொறுப்புக் களை முறையாகக் கவனிப்பதற்கு முடியாமற் போனது. இயலாமை மற்றும் நீண்ட சுகவீன லீவு போன்ற

காரணங்களால் மனித வள முகாமையாளர் அவருடைய தொழிலை முடிவுறுத்துவதற்குத் தற்போது தீர்மானித்திருக்கிறார்.

(a) பணியாளர்களின் தொழிலை முடிவுறுத்துகின்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் அடிப்படையில், இது ஒரு ''தொழில் முடிவுறுத்தலா'' என்பதை **அமலுக்கு விபரிக்குக**. (03 புள்ளிகள்)

(b) பணியாளர்களின் தொழிலை முடிவுறுத்துகின்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், உள்ளடக்கப் படாத இரண்டு (02) வகையான ஊழியர்களைக் **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

எந்தவொரு நிறுவனத்தின் கணக்காளரும் அந்நிறுவனத்தில் பிரதான பங்கினை வகிப்பதுடன் முக்கியமான முடிவெடுத்தற் செயற்பாடுகளிலும் பங்கேற்கிறார். அறிக்கையிடல் நோக்கங்களுக்காக கம்பனி ஒன்றின் நிதிசார் பதிவுகளை மீளாய்வு செய்யும்போது, கணக்காளர் ஒருவர் ஒழுக்கநெறித் தேவைப்பாட்டிற்கான பக்கச்சார்பின்மை மற்றும் நேர்மை ஆகியவற்றை நினைவிற் கொள்ளுதல் வேண்டும். தனியார் துறையில் அல்லது அரச துறையில் பணியாற்றும் ஒரு கணக்காளர், அவர் எந்தத் தொழிற்றுறையில் பணியாற்றி னாலும் ஒழுக்கநெறிப் பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடும். வெளிவாரியான வற்புறுத்தல்கள் மூலம் நிதிசார் பதிவுகள் கையாளப்படுவதற்கான வாய்ப்புகளைக் குறைப்பதன் பொருட்டு அவர் தொடர்ச்சியான விழிப்புடன் இருத்தல் வேண்டும். இல்லையெனின், அது ஒழுக்கநெறி மீறல் மற்றும் குற்றவியல் மீறல் ஆகிய இரண்டிற்கும் இட்டுச் செல்லும்.

கணக்காளர் ஒருவர் முகங்கொடுக்கின்ற பிரதான ஒழுக்கநெறிப் பிரச்சினைகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

*பகுதி B யின் முடிவு*

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

**நிசங்க** மற்றும் **கபில** ஆகிய இருவரும் "NK பங்குடமை'' என்ற பெயரில், தளபாடங்களை வாங்கி விற்கின்ற பங்குடமை வியாபாரம் ஒன்றினை 2014 ஆம் ஆண்டில் ஆரம்பித்தனர். அவர்களுக்கிடையே எந்தவொரு பங்குடமை உடன்படிக்கையும் இருக்கவில்லை. எனவே அவர்கள், பங்குடமையை நடத்திச் செல்வதுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கான தீர்வுகளைக் காண்பதற்கு 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டத்தினைப் பின்பற்றினர்.

2016 சனவரியில், **நிசங்க** "NK பங்குடமை'' இன் பெயரில் கடனுக்கு சில தளபாட உருப்படிகளை வாங்கி, அவற்றை ஒரு இலாப எல்லையுடன் விற்பனை செய்திருந்தார். எவ்வாறாயினும், மேலுள்ள கொடுக்கல் வாங்கலில் இருந்து கிடைத்த இலாபத்தினை அவர் **கபில**வுடன் பகிர்ந்து கொள்ளவில்லை. இதனைத் தொடர்ந்து **நிசங்கவுக்கும் கபிலவுக்குமிடையே** பிணக்கு ஏற்பட்டது. தற்போது அவர்கள் பங்குடமையை கலைத்துவிடத் தீர்மானித்திருக்கின்றனர்.

(i) மேலுள்ள கொடுக்கல் வாங்கலிலிருந்து கிடைத்த இலாபத்தினை **கபிலவுடன்** பகிர்ந்து கொள்வதற்கு **நிசங்கவுக்கு** சட்டரீதியான கடப்பாடு உள்ளதா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(ii) நீதிமன்றத்தின் தலையீட்டுடன் பங்குடமை ஒன்றைக் கலைக்கக்கூடிய நான்கு (04) சந்தர்ப்பங்களைக் **கூறுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 08

(a) குறித்ததொரு நிச்சயமற்றதான நிகழ்வு நடைபெறும்போது, காப்பீடு பெறுபவருக்கு காப்பீடு அளிப்பவர் ஒரு தொகைப் பணத்தினைக் கொடுப்பனவு செய்ய வேண்டும் என்றும் பதிலுக்கு, காப்பீடு பெறுபவர் காப்பீடு அளிப்பவருக்கு தவணைக் கொடுப்பனவினைச் செலுத்த வேண்டும் என்றும் காப்பீடு அளிப்பவரும் காப்பீடு பெறுபவரும் உடன்படுகின்ற ஒரு ஒப்பந்தத்தைக் காப்புறுதிச் சட்டம் என பொருள் வரையறை செய்யலாம். இழப்பீட்டுக் (indemnity) காப்புறுதி மற்றும் எதிர்பாரா நிகழ்வுக் (contingency) காப்புறுதி என அடிப்படைக் காப்புறுதி வகைகள் இரண்டு காணப்படுகின்றன.

மேலுள்ள அடிப்படை காப்புறுதி வகைகள் இரண்டினையும் (02) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **சுனில்,** தனது அலுவலகக் கட்டடத்திற்கான தீ காப்புறுதிகள் இரண்டினை **வரையறுக்கப்பட்ட RR காப்புறுதிக் கம்பனி** மற்றும் **வரையறுக்கப்பட்ட சிலோ காப்புறுதிக் கம்பனி** ஆகிய இரண்டு வெவ்வேறான கம்பனிகளிடமிருந்து முறையே ரூ. 500,000/- மற்றும் ரூ. 750,000/- இற்குப் பெற்றிருக் கிறார். மின்சார ஒழுக்கொன்றினால் ஏற்பட்ட தீ காரணமாக கட்டடத்திற்கு ரூ. 300,000/- இழப்பு ஏற்பட்டது. **சுனில்,** இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் தலா ரூ. 300,000/- வீதம் பெறுவதற் கான உரிமைக் கோரிக்கையினைச் (claim) செய்வதற்கு தாம் உரித்துடையவர் என வாதிடுகிறார்.

**சுனில்,** இரண்டு காப்புறுதிக் கம்பனிகளிடமிருந்தும் தலா ரூ.300,000/- வீதம் பெறுவதற்கான உரிமைக் கோரிக்கையினைச் செய்வதற்கு உரித்துடையவரா என்பதை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பண மோசடிச் சட்டத்தின் நோக்கங்கள், இலங்கையில் பண மோசடியினைத் தடுப்பதும் பண மோசடிக்கு எதிராகப் போராடுவதற்குத் தேவையான வழிமுறைகளை வழங்குவதும் ஆகும். பண மோசடி பற்றிய வரைவிலக்கணத்தில் கூறப்படும் எந்தவொரு செயலையும் செய்கின்ற எந்தவொரு நபரும் அல்லது பண மோசடிக்கு உதவுகின்ற மற்றும் துணைபோகின்ற எந்தவொரு நபரும் குற்றம் புரிகின்ற ஒரு குற்றவாளியாவார். அவ்வாறானதொரு செயலைப் புரிகின்ற இலங்கையில் வதியும் எந்தவொரு நபருக்கும், இலங்கையில் வியாபாரத்தினை முன்னெடுத்துச் செல்லும் (இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட) எந்தவொரு நிறுவகத்திற்கும் அல்லது இலங்கையினுள் புரியப்படும் அத்தகைய எந்தவொரு செயலுக்கும் பண மோசடிச் சட்டத்தினைப் பிரயோகிக்க முடியும்.

(a) ‘‘பண மோசடி’’ என்பதன் கருத்தினை (meaning) **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பண மோசடிச் சட்டத்தின்படி, சட்டவிரோதச் செயற்பாடுகள் ஐந்தினைக் (05) **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(Total 10 புள்ளிகள்)

*பகுதி C யின் நிறைவு*

# <u>பகுதி D</u>

ஒரு கட்டாய வினா

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 10

(a) **ரசித்** என்பவர் நேர்முகப்பரீட்சை ஒன்றிற்குச் சென்றுவிட்டு, பஸ்சில் பிரயாணத்தை மேற்கொள்ளும் போது அவருடைய பட்டச் சான்றிதழ், AAT அங்கத்துவச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் மற்றும் வேறு முக்கிய சான்றிதழ்கள் ஆகியவற்றினைக் (மூலச்சான்றிதழ்கள்) கொண்ட கோப்பினைத் தவறவிட்டிருந்தார். அந்தச் சான்றிதழ்கள் அவருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகையால் அவர், தனது சான்றிதழ்கள் அடங்கிய கோப்பினைத் திருப்பித் தருபவர்களுக்கு ரூ. 20,000/- வெகுமதி அளிக்கப்படுமென வார இறுதிச் செய்தித்தாள் ஒன்றில் விளம்பரம் ஒன்றினைப் பிரசுரித்தார். வெகுமதி தொடர்பான விளம்பரத்தைப் பற்றி அறியாத **நிசாதி,** அச்சான்றிதழ்கள் அடங்கிய கோப்பினைக் கண்டெடுத்து, கோப்பின் பின்பக்கத்தில் எழுதப்பட்டிருந்த **ரசித்**தினுடைய அஞ்சல் முகவரிக்கு அதனைத் திருப்பி அனுப்பியிருந்தார். சான்றிதழ்கள் அடங்கிய கோப்பினைத் திருப்பி அனுப்பியதன் பின்னர், **நிசாதி**க்கு வெகுமதி அறிவித்தலைப் பற்றித் தெரியவரவே **ரசித்**திடம் உரிமைக் கோரிக்கையொன்றினை (Claim) விடுத்திருந்தார். ஆயினும், **ரசித்**, **நிசாதி**க்கு வெகுமதியை வழங்குவதற்கு மறுத்திருந்தார்.

**நிசாதி ரசித்**திடமிருந்து வெகுமதியைப் பெறுவதற்கான உரிமைக்கோரிக்கையினைச் (claim) செய்வதற்கு சட்ட ரீதியான உரித்துடையவரா என்பதை **ஆராய்க.** (12 புள்ளிகள்)

(b) கணினிகள் மற்றும் கணினியின் துணைப் பொருட்கள் ஆகியவற்றின் விற்பனைப் முகவரான **சமன்,** முழுத் தொகையையும் காசாகச் செலுத்திய பின்னர் **லெஸ்லி** என்பவரிடமிருந்து பாவிக்கப்பட்ட கணினியொன்றினை ரூ. 60,000/- இற்கு வாங்கினார். **லெஸ்லி**யிடமிருந்து கணினியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், **சமன்** அதற்கு சில சிறிய பழுதுபார்ப்புகளைச் செய்து தனது காட்சியறையில் காட்சிப்படுத்தியிருந்தார். **சமனின்** ஒரு வாடிக்கையாளரான **ஜெயலால்** கணினி ஒன்றிற்கான துணைப் பொருட்களைத் தேடும்போது, இந்தக் கணினியினைக் கண்டு அதனை வாங்க விரும்பினார். **சமன்** அதனை **ஜெயலால்** இற்கு ரூ. 80,000/- இற்கு விற்பனை செய்தார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, இந்தக் கணினி **லெஸ்லி**யினால் களவாடப்பட்ட கணினி எனக் கூறி பொலிசாரினால் மீட்கப்பட்டது. கணினியானது, பொலிசாரின் தலையீட்டுடன் அதன் சொந்த உரிமையாளரிடம் மீள ஒப்படைக்கப் பட்டது. **சமன்** ரூ. 80,000/- இனை **ஜெயலாலுக்குத்** திருப்பிக் கொடுத்ததுடன் அவர் **லெஸ்லி**க்குக் கொடுத்திருந்த ரூ. 60,000/- இற்காக **லெஸ்லிக்கு** எதிராக வழக்குத் தொடுத்திருந்தார்.

**சமன், லெஸ்லி**யிடமிருந்து ரூ. 60,000/- இனை மீட்டெடுப்பதற்கு உரித்துடையவரா என்பதை **ஆராய்க**.

(13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி D யின் முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |